ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1646/6 - 2010 මාර්තු 22 වැනි සඳුදා - 2010.03.22
*1646/6 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13(ஆ) என்னும் பந்தியின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்*

*இல. 15 - குருநாகல் தேர்தல் மாவட்டத்திற்காக 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. இந்திக பண்டாரநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக ஆறாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தின் பதிற் கடமை புரியும் செயலாளர் நாயகம் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;*

*அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13 (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக, இவ்வெற்றிடத்தை நிரப்புமாறு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64 (1) என்னும் பிரிவின்கீழ் அவ்வுறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*தெரிவத்தாட்சி அலுவலர், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவின்கீழ் செயற்பட்டு, அத்தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக திரு. திசாநாயக்க முதியன்சேலாகே பண்டாரநாயக்க என்பவர் , தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என வெளிப்படுத்தி, மேற்கூறப்பட்ட சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள “க” என்னும் படிவத்திலான விவரத்திரட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;*

*ஆகவே, இப்பொழுது தேர்தல்கள் ஆணையாளரான தயானந்த திசாநாயக்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, மேற்கூறப்பட்ட திரு. இந்திக பண்டாரநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக இல. 15- குருநாகல் தேர்தல் மாவட்டத்திற்கான ஆறாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக திரு. திசாநாயக்க முதியன்சேலாகே பண்டாரநாயக்க என்பவர், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

*தயானந்த திசாநாயக்க,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*2010, மாச்சு 22.*

*4- 199/1*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13(ஆ) என்னும் பந்தியின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்**

இல. 15 - குருநாகல் தேர்தல் மாவட்டத்திற்காக 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட திரு. ஜொன்ஸ்ரன் சேவியர் பர்னாந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக ஆறாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தின் பதிற் கடமை புரியும் செயலாளர் நாயகம் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;

அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் 13 (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக, இவ்வெற்றிடத்தை நிரப்புமாறு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64 (1) என்னும் பிரிவின்கீழ் அவ்வுறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

தெரிவத்தாட்சி அலுவலர், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவின்கீழ் செயற்பட்டு, அத்தேர்தல் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக திரு. அநுர கொபல்லவ என்பவர் , தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என வெளிப்படுத்தி, மேற்கூறப்பட்ட சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ''க'' என்னும் படிவத்திலான விவரத்திரட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

ஆகவே, இப்பொழுது தேர்தல்கள் ஆணையாளரான தயானந்த திசாநாயக்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, மேற்கூறப்பட்ட திரு. ஜொன்ஸ்ரன் சேவியர் பர்னாந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக இல. 15- குருநாகல் தேர்தல் மாவட்டத்திற்கான ஆறாவது பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக திரு. அநுர கொபல்லவ என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2010, மாச்சு 22.

4- 199/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.